www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSS

8 - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# அரையாண்டுத் தேர்வு – 2024
## சமூக அறிவியல்

8303

மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்.
(அ) சுஜா – உத் – தௌலா (ஆ) சிராஜ் – உத் – தௌலா (இ) மீர்காசிம் (ஈ) திப்பு சுல்தான்

2. ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?
(அ) பம்பாய் (ஆ) மதராஸ் (இ) வங்காளம் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' யாரால் வெளியிடப்பட்டது?
(அ) மருது சகோதரர்கள் (ஆ) கிருஷ்ணப்ப நாயக்கர் (இ) வேலு நாச்சியார் (ஈ) தீரன் சின்னமலை

4. நாளந்தாவை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது?
(அ) 2006 (ஆ) 2007 (இ) 2008 (ஈ) 2009

5. இந்தியாவில் தொழில்மயம் அழிதலுக்கு காரணம் அல்லாதது எது?
(அ) ஆட்சியாளர்களின் ஆதரவின்மை (ஆ) இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி
(இ) இந்தியாவின் தொழிற்துறை கொள்கை (ஈ) பிரிட்டிஷாரின் வர்த்தக கொள்கை

6. கீழ்க்கண்டவற்றுள் எது பாறைக் கோளம் என அழைக்கப்படுகிறது?
(அ) வளிமண்டலம் (ஆ) உயிர்க்கோளம் (இ) நிலக்கோளம் (ஈ) நீர்க்கோளம்

7. குடிப்பதற்கு உகந்த நீரை ________ என்று அழைப்பர்.
(அ) நிலத்தடி நீர் (ஆ) மேற்பரப்பு நீர் (இ) நன்னீர் (ஈ) ஆர்ட்டீசியன் நீர்

8. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது ________.
(அ) கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு (ஆ) கிராமத்தில் இருந்து நகரத்திற்கு
(இ) நகரத்தில் இருந்து கிராமத்திற்கு (ஈ) நகரத்தில் இருந்து நகரத்திற்கு

9. சார்புத் துறை ________ வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
(அ) 4 (ஆ) 3 (இ) 2 (ஈ) 5

10. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ________.
(அ) கேப் பிளாங்கா (ஆ) அகுல்காஸ் முனை (இ) நன்னம்பிக்கை முனை (ஈ) கேப் டவுன்

11. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?
(அ) ஆளுநர் (ஆ) முதலமைச்சர் (இ) உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி (ஈ) குடியரசுத் தலைவர்

12. உலக மனித உரிமைகள் தினம் ________.
(அ) டிசம்பர் 9 (ஆ) டிசம்பர் 10 (இ) டிசம்பர் 11 (ஈ) டிசம்பர் 12

13. **கூற்று:** சாலை குறியீடுகள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய ஒன்று.
**காரணம்:** அவைகள் பெரும்பாலும் படங்களாக இருக்கின்றன.
(அ) கூற்று சரி, காரணம் தவறு. (ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
(இ) கூற்று தவறு, காரணம் சரி. (ஈ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

14. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன?
(அ) தங்கம் (ஆ) வெள்ளி (இ) வெண்கலம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

II. பொருத்துக 6 x 1 = 6

15.

| | | |
|---|---|---|
| (i) கெல்டிரியா கோட்டை | – | சம அளவுள்ள பனிப்பொழிவு |
| (ii) டெல்லி | – | செயல்படும் எரிமலை |
| (iii) பாரன் தீவு | – | 1829 |
| (iv) ஐசோநிப் | – | இரண்டாம் பகதூர் ஷா |
| (v) சதி ஒழிப்புச் சட்டம் | – | நுகர்வு தவிர்த்த வருமானம் |
| (vi) சேமிப்பு | – | பழவேற்காடு |

III கோடிட்ட இடங்களை நிரப்புக. 5 x 1 = 5

16. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் ________.

17. 'இந்தியாவின் உள்ளாட்சி அமைப்பின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ________.

18. இடர்கள் ________ க்கு வழிவகுக்கிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

19. இந்தியக் கடவுச்சீட்டினைப் (Passport) பெற்று வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் ________ என அழைக்கப்படுகிறார்.

20. மின்னணு வங்கியை ________ என்றும் அழைக்கலாம்.

IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக. 5 x 1 = 5

21. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.

22. இந்தியா பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு புகழ் வாய்ந்தது.

23. சமயச்சார்பின்மை என்ற சொல் கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டுள்ளது.

24. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.

25. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.

V. வேறுபடுத்துக. 5 x 2 = 10

26. மண்வளப் பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு

27. வானிலை மற்றும் காலநிலை

28. வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி

29. நில அதிர்வு மற்றும் சுனாமி

30. பெரிய அளவிலான தொழிலகங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழிலகங்கள்

VI. காரணம் கூறுக. 5 x 1 = 5

31. தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.

32. உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.

33. நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.

34. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.

35. அண்டார்டிகா 'ஆராய்ச்சியாளர்களின் கண்டம்' என அழைக்கப்படுகிறது.

VII. சுருக்கமாக விடையளி (எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி). 10 X 2 = 20

36. இளவரசர் ஹென்றி 'மாலுமி ஹென்றி' என ஏன் அழைக்கப்படுகிறார்?

37. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.

38. வேலூர் கலகத்தின் விளைவுகளை எழுதுக.

39. 'செல்வச் சுரண்டல் கோட்பாடு' பற்றி எழுதுக.

40. 'பாறைகள்' வரையறு.

41. நீர்கொள் பரப்பு பற்றிக் குறிப்பு வரைக.

42. நகரமயமாக்கல் என்றால் என்ன?

43. மலை அடிவாரப் பகுதிகளில் நாம் ஏன் குடியிருப்புகளை அமைக்க கூடாது?

44. நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக.

45. மனித உரிமைகள் என்றால் என்ன?

46. சாலை விபத்துக்களின் நேரடி விளைவுகள் என்ன?

47. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

VIII. விரிவான விடையளி. 4 x 5 = 20

48. நிலையான நிலவரித் திட்டத்தின் நிறை, குறைகளை விவாதிக்க. (அல்லது)
சமண, பௌத்த மடாலயங்களில் கல்வியின் முக்கியக் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.

49. வானிலைக் கூறுகளையும், அதை அளக்க உதவும் கருவிகளையும் பட்டியலிடுக. (அல்லது)
தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப் படம் மூலம் விளக்குக.

50. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி. (அல்லது)
இந்தியா போன்ற நாட்டிற்குச் சமயச்சார்பின்மை அவசியம் – நிரூபிக்கவும்.

51. பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக. (அல்லது)
சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

IX. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் (India outline map) குறிக்கவும். 10 x 1 = 10

(i) பஞ்சாப் (ii) மீரட் (iii) ஆக்ரா (iv) விக்ரமசீலா (v) பாரக்பூர்
(vi) ஜாம்ஷெட்பூர் (vii) கேடா (viii) வந்தவாசி (ix) ஸ்ரீரங்கப்பட்டிணம் (x) அரபிக்கடல்

X. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

(i) இந்தியா (ii) ஆசியா (iii) மகரரேகை (iv) மித வெப்ப மண்டலம் (v) பசிபிக் பெருங்கடல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com